செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி

இல: 1074 | 1970 ஜூலை 6 திங்கட்கிழமை | விலை சதம் 5

University of Jaffna Sri Lanka RECEIVED Periodicals Division Library

920 87/70



## கலாசார மந்திரி தீர்மானம்

# தொடையை காட்டி உடை அணிய தடை

**தொடை தெரியுங் கட்டை கவுண் அணிவதை தடை செய்ய, கலாசார மந்திரி தீர்மானித்துள்ளார்.**

பெண் குலத்துக்கே மான பங்கம் ஏற்படுத்துவதுடன் இந்தக் கட்டைக் கவுண்கள் எமது கலாசாரத்துக்கு ஒத்து வராது என மந்திரி சொன்னார்.

கட்டைக் கவுன் தொல்லையை அதி விரைவில் ஒழித்துக் கட்ட நடவடிக்கை எடுக்கும்படி நாட்டின் பல பகுதிகளில் உள்ள கலாசார ஸ்தாபனங்கள் அமைச்சரிடம் கோரியுள்ளன.

சில நாடுகளில் கட்டைக் கவுன் தொல்லையை ஒழிக்க ஏற்கனவே சட்டமியற்றப்பட்டுள்ளது.

## மீனாட்சி



என்னுங்க. கொழும்பு முனிசிப்பல் வரவேற்புக்கு முடியாது என்று விட்டாராமே முதல் அமைச்சர்!

ஆமாங்க, அந்த வரவேற்புக்குச் செலவிடும் பணத்தை றெக்கிளமேஷன் வீதியில் வருஷக்கணக்காகக் கிடக்கும் குப்பையை அள்ளிக் கொட்டச் சொல்லியிருக்க வேண்டும்!

# ஆசிரியைகளுக்கு தடை உத்தரவு

தொடை தெரியும் மினி கவுன் கமக்கட்டுத் தெரியும் சட்டை, வயிறு தெரியும் சாரி, இப்படியாக காம உணர்ச்சியைத் தூண்டும் விதத்தில் ஆடை அணிந்து பாடசாலைக்கு வருவது ஆசிரியைகளுக்குத் தடை செய்யப்பட்டு உள்ளது.

இதற்கான சட்டத் திட்டங்கள் கல்வி அமைச்சினால் இப்போது வகுக்கப்பட்டு வருகின்றன.

இள வயதுப் பிள்ளைகள் கல்வி கற்கும் இடத்தில் குமரி ஆசிரியைகள் இவ்வாறு உடை அணிவதால் வளரும் பிள்ளைகள் மனதில் தீய எண்ணங்கள் ஏற்பட இடமுண்டென்றும் அத்தோடு பிள்ளைகளுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டிய ஆசிரியைகளே இவ்வாறு நடந்து கொள்வது கூடாது என்றும் கல்வி அமைச்சு கருதுகிறது.

ஒழுங்கான முறையில் உடை அணிந்து பாடசாலைகளுக்கு வருமாறு கல்வி மந்திரி ஆசிரியைகளுக்குப் புத்திமதி கூறியுள்ளார்.

கொழும்புப் பகுதி பாடசாலைகளிலேயே இந்த அலங்கோலம் அதிகம் என கண்டு பிடிக்கப்பட்டு உள்ளது. குமரி ஆசிரியைகள் சிலர் வாலிப மாணவர்கள் படிக்கும் பாடசாலைகளில் தொடையைக் காட்டும் கட்டைக் கவுண் அணிந்து பாடசாலைக்கு வருவதைப் பற்றி கல்வி அமைச்சுக்குப் பெற்றோர் பலர் முறைப்பாடு செய்துள்ளனர்.

"படிப்பித்தால் மட்டும் போதாது, பிள்ளைகள் ஒழுக்கத்துடனும் வாழ ஆசிரியர்கள் முன் மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும்" என்றும் கல்வி மந்திரி டாக்டர் பதியுதீன் மஹ்மூத் கூறியுள்ளார். (ல)



தாய்ப் புலி கவனிக்காததால் இச்சின்னஞ் சிறிய புலிக் குட்டிக்கு இந்தியப் பெண் ஒருவர் புட்டிப் பால் புகட்டி வளர்க்கிறார். ஜெர்மனியிலுள்ள பிரீமன் விலங்கு கண்காட்சி டைரக்டரின் மனைவியான இவரின் பெயர் ஜாய்ஸ் மன்ரோ. இவர்கள் இந்தியத் தம்பதிகள்.

# சிறைத் தண்டனை சட்டம் தளர்த்தப்படும்

மூன்று மாதங்களுக்குக் கூடுதலான சிறைத் தண்டனை பெற்றவர்களும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படக் கூடியதாக தற்போதைய சட்டத்தில் திருத்தம் செய்யப்படும்.

நேற்று கூடிய அரசாங்க நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் இது பற்றி முடிவு செய்யப்பட்டது.

சட்டத் திருத்தத்தைச் சீக்கிரமாகக் கொண்டு வருவதெனவும், கடந்த காலங்களில் அரசியல் முன்னேற்ற நடவடிக்கைகளுக்காக சிறைத் தண்டனை அனுபவித்தவர்களையும் உள்ளடக்கக் கூடியதாக திருத்தம் கொண்டு வருவதெனவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

பிரதமர் திருமதி ஸ்ரீமாவுக்குப் பதிலாக சுதந்திரக் கட்சி உபதலைவரான திரு. மைத்திரிபால சேனநாயக்கா, கூட்டத்துக்கு தலைமை வகித்தார். (ல)

## தீர்மானம்

"லேக் ஹவுஸ்" என்று ஆங்கிலத்தில் வழங்கப்படும் ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனத்தைக் காலதாமதமின்றிக் கையேற்பது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்றக் குழு நேற்றுத் தீர்மானித்தது.

ரோயல் கமிஷன் வைத்து லேக் ஹவுஸ் பற்றி விசாரணை நடத்துவதால் உருப்படியான பலன் ஏற்படப் போவதில்லை. பத்திரிகை நிறுவனத்தையே கையேற்று விட வேண்டும் என்று பலரும் வற்புறுத்தியதைத் தொடர்ந்தே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# நாட்டின் பல பகுதிகளுக்கும் புது மீன் கிடைக்கத் திட்டம்

பொது மக்கள் நாளாந்தம் புது மீன் பெறுவதற்கு ஏதுவாக மீன் பிடி மந்திரி திரு ஜோர்ஜ் ராஜபக்ச திட்டம் ஒன்று வகுத்துள்ளார்.

இத்திட்டத்தின்படி, இலங்கையின் மலைப் பகுதிகளில் வாழும் மக்களும் நாளாந்தம் புதிய மீனை உணவுக்குப் பயன்படுத்த வழி பிறக்கும்.

இதுகாலவரையும் மீன் பிடிக் கூட்டுத்தாபனத்தினால் பல பகுதிகளில் ஐஸ் வைக்கப்பட்ட மீன் விற்கப்பட்டு வந்தது.

கடந்த காலங்களில் கடற்கரைப் பகுதிகளில் பிடிக்கப்படும் மீன் நேராக கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டு பின் அங்கிருந்து ஐஸ் வைக்கப்பட்டு பிற பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டது. இம்முறையை ஒழித்து பிடிக்கப்படும் மீனை முதலில் கொழும்புக்குக் கொண்டு வராமல் நேராக தேவையான பகுதிகளுக்கு அனுப்புவதற்கு மீன் பிடி மந்திரி திரு. ஜோர்ஜ் ராஜபக்ச புதிய திட்டம் ஒன்று வகுத்துள்ளார்.

இத்திட்டத்தின்படி, நாட்டின் பல பகுதிகளில் நிலவும் மீன் பற்றாக் குறையும் தீரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ல)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாரும் இல்லாத வெளியிலே

# 'தேயிலைப் புதரில் வைத்து உடலுறவு கொண்டார்'

## கங்காணி மீது லட்சுமி வழக்கு

"தேயிலைச் செடிகள் அடர்ந்த ஒரு ஒதுக்குப்புறமான இடத்துக்கு என்னை ஒரு நாள் அழைத்துச் சென்ற அவர், அங்கே வைத்து என்னுடன் உடலுறவு கொண்டார். அதுதான் நான் ஆடவர் ஒருவருடன் உடலுறவு கொண்ட முதற் தடவை. அதற்குப் பின் நாங்கள் இருவரும் பல முறை அவ்விதம் நடந்து கொண்டோம்."

அட்டன் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஜீவனாம்ச வழக்கொன்றில் சாட்சியம் அளித்த இருபத்துமூன்று வயதுடைய இளம் பெண் ஒருத்தி மேற்கண்டவாறு கூறினாள்.

இந்த வழக்கில், லிண்டுல என்ற இடத்தில் உள்ள பம்பரக்கல என்னும் தோட்டத்தைச் சேர்ந்த லட்சுமி என்ற பெண், அதே தோட்டத்தைச் சேர்ந்த திரவியம் என்பவரிடம் இருந்து தனது குழந்தைக்கு ஜீவனாம்சம் பெற்றுத் தரும்படி கோரி மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். மனுதார் தொடர்ந்து சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:-

"1969-ம் ஆண்டு மார்ச் மாதம் ஒரு நாள், நான் மலையில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்தேன். என்னுடன் மேலும் மூன்று பெண்கள் இருந்தார்கள். அப்பொழுது அங்கே கங்காணி வேலை செய்து கொண்டு, ஆட்டுக்குக் குழை பறித்துக் கொண்டிருந்த பிரதிவாதி என்னை அவர் அருகில் அழைத்தார். இலைகளைத் தூக்கிக் கொண்டு போகும்படி என்னிடம் சொன்ன அவர், மற்றப் பெண்களுக்கு வேறு வேலை கொடுத்து அனுப்பி விட்டார். பின்னர் அவர் என்னைச் சந்தித்து, "நான் உன்னை நன்றாகக் கவனித்துக் கொள்கிறேன். நீ எனது விருப்பத்திற்கு இணங்க வேண்டும்" என்று கூறினார். நான் மறுத்து விட்டு அந்த இடத்தை விட்டு அகன்றேன்.

"பிறகு, ஏப்பிரல் மாதம் ஒரு நாள் 11-ம் இலக்க மலையில் நான் தனியாகப் புல் வெட்டிக் கொண்டிருந்தபொழுது அங்கே வந்த எதிர் மனுதார், என்னை அழைத்தார். நான் அவர் அருகில் போனேன். தேயிலைச் செடிகள் நன்றாக வளர்ந்திருந்த ஒரு இடத்தில் என்னைக் கிடத்தி, என்னுடன் உடலுறவு கொண்டார். அதுதான் நான் ஆடவர் ஒருவருடன் முதன் முதலாக உடலுறவு கொண்ட தினம். அதற்குப் பின் நாங்கள் இருவரும் பல முறை உடலுறவு கொண்டோம். நான்கு மாதங்களின் பின் எனக்கு வயிற்று வலி ஏற்பட்டது. என் தாயார் என்னை வைத்தியரிடம் அழைத்துச் சென்றபொழுது அவர், நான் கர்ப்பவதியாக இருப்பதாகக் கூறினார். மருந்து கொடுக்க மறுத்த அவர், இந்தச் சம்பவத்தைத் தோட்டத் துரையிடம் அறிவித்தார்.

"டிசம்பர் மாதம் 14-ம் திகதி எனக்குக் குழந்தை பிறந்தது. அவருக்குப் பிறந்த குழந்தைக்குப் பிரதிவாதியிடம் இருந்து மாதம் 25 ரூபா வீதம் பராமரிப்புப் பணம் பெற்றுத் தர தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்."

இக்கட்டத்தில், வழக்கு விசாரணை ஜூலை மாதம் 16-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (க)

## வியபிசார விடுதி நடத்தியதாக 3 இளம் பெண்கள் கைது

வியபிசார விடுதி நடத்தினர்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில், மூன்று அழகிய இளம் பெண்களை அனுராதபுரம் பொலீசார் கைது செய்து, நீதி மன்றத்தில் ஆஜர் செய்தனர்.

அனுராதபுரம், மல்வத்த ஒழுங்கையைச் சேர்ந்த ரெங்கசாமி அருசம்மா, கட்டுப்புளியங்குளத்தைச் சேர்ந்த எச். எம். ஐராங்கனி, ஒரு குறிப்பிட்ட இடத்தை வசிப்பிடமாகக் கொண்டிராத சித்தி சரணா ஆகிய மூன்று பெண்களுமே நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் மூவரையும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி கூறிய அனுராதபுரம் மேலதிக மாஜிஸ்திரேட் திரு. மேவின் விஜயசிங்கா, சந்தேக நபர்களை ஜூலை 13-ம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார். (க)

## கட்டாய நிபந்தனை தேவை

கடைகளை இரவு எட்டரை மணி வரைக்கும் திறந்திருக்கக் கூடிய சட்டம் ஒன்றைத் தொழில் அமைச்சர் உத்தேசித்துள்ளார். அதற்கு முக்கிய காரணம் ஒரு பெருந்தொகையினருக்குப் புதிதாக வேலை கிடைக்கும் என்பதாகும். இது வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினையை ஓரளவில் தீர்ப்பதற்கு உதவுவதுமாகும். ஆம்; உண்மையில் நல்ல திட்டமாகும். பலருக்கும் வேலையும் கிடைக்கும்; பொதுமக்களும் தங்கள் தொழில் நிலையங்களிலிருந்து மாலையில் வீடு திரும்பும்போது தங்களுக்கு வேண்டியவற்றை வாங்கிக் கொண்டு செல்லலாம். ஆனால், சில கடை முதலாளிகள் இருக்கின்றார்களே அவர்கள் விஷயத்தில்தான் எச்சரிக்கையாய் இருத்தல் வேண்டும். இப்போதே இவர்கள் ஒற்றைக் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு இரவும் பகலும் வியாபாரம் செய்பவர்களாவர். இவர்களுக்கு இடமளிக்காதிருப்பதற்காக புதிய ஊழியர்களை நியமிக்கவே வேண்டும் என்ற வலுக் கட்டாயச் சட்டம் வேண்டும்.

தந்தி

## பாட்டனாருக்குக் கொடுக்க மூக்குக் கண்ணாடி திருடினார்

மூக்குக் கண்ணாடி மீது மனம் பறிகொடுத்து, அதனைத் திருடிய இளைஞர் ஒருவர் இரத்தினபுரி மாஜிஸ்திரேட் திரு. ஸ்ரீலால் பெரேரா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

இந்த வழக்கில், ஜே. எம். புஞ்சி மஹத்மயா என்ற இளைஞர் மீது மூக்குக் கண்ணாடியைத் திருடியதாகக் குற்றம் சுமத்தினர் பொலீஸார். வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மாஜிஸ்திரேட்:- (சந்தேக நபரைப் பார்த்து) "உம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு நீர் என்ன பதில் கூறுகிறீர்?"

பிரதிவாதி:- "என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு உண்மை ஐயா. நான் மூக்குக் கண்ணாடியைத் திருடியது உண்மைதான்."

மாஜிஸ்திரேட்:- "நீ ஒரு திடகாத்திரமான இளைஞன். உனது கண்கள் இரண்டும் நன்றாக இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. அப்படியிருக்க, நீ ஏன் மூக்குக் கண்ணாடியைத் திருடினாய்? அதை வைத்துக் கொண்டு நீ என்ன செய்யப் போகிறாய்?"

பிரதிவாதி:- "அதை எனது பாட்டனாருக்குக் கொடுப்பதற்காகவே திருடினேன். அது மிகவும் அழகான மூக்குக் கண்ணாடி ஐயா. அதனாலேயே திருடினேன்.

"அந்த மூக்குக் கண்ணாடியை நான் என் தாத்தாவிடம் கொடுக்கவில்லை. அதன் அழகு என்னைக் கவர்ந்து விட்டதால், அதை அவரிடம் கொடுக்க என் மனம் இடந்தரவில்லை. அதனால் நானே அதை என்னிடம் வைத்திருக்கிறேன்."

எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட மாஜிஸ்திரேட், அவர் குற்றவாளி என்பதை ஒத்துக் கொண்டதைத் தொடர்ந்து அவருக்கு முப்பது ரூபா அபராதம் விதித்தார். (க)

## தற்கொலை செய்து கொண்ட இளைஞனுக்கு ஊர் எதுவோ?

"எனது சகோதரர்கள் உப்பாலிக்கும், விஜயாவுக்கும், நான் 1970-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் திகதி காலை 5-15-க்கு இங்கு வந்தேன்..."

இந்த வாசகங்களை, ஒரு வெள்ளைக் கால்சட்டையில் "போல் பொயின்ற்" பேனையால் சிங்களத்தில் எழுதி வைத்து விட்டு, தன் உயிரைப் போக்கிக் கொண்டுள்ளான் ஒரு இளைஞன். இந்த இளைஞன் எந்த ஊரைச் சேர்ந்தவன் என்பதைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் பொலீஸார் ஈடுபட்டு உள்ளனர்.

இந்தப் பரிதாப முடிவைத் தேடிக் கொண்ட இளைஞனின் சடலம், நானுஓயா கிளெரண்டன் தோட்டத் தொழிற்சாலைக்கு அருகில் கண்டு பிடிக்கப்பட்டது.

நுவரெலியா திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் டபிள்யூ. ஜி. விமலதாஸ விசாரணை நடத்தினார். பிரேதத்தைப் பல கோணங்களிலும் புகைப்படம் பிடிக்கும்படி உத்தரவிட்ட அவர், அதனைப் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கும்படியும் உத்தரவிட்டார். அந்தப் பிரேதம் இப்பொழுது நுவரெலியா பேஸ் ஆஸ்பத்திரிப் பிரேத அறையில் வைக்கப்பட்டிருக்கிறது. (க)

## 2 பெண்களைக் கடத்தியவருக்கு 2 மாத சிறைத் தண்டனை

இருபத்தொரு வயது இளைஞர் ஒருவர் இளம்பெண் ஒருத்தியைக் கடத்திச் சென்றாராம். இதுபற்றிய வழக்கு இன்னும் முடிவடையவில்லை. அதற்குள் மற்றொரு பருவப் பெண்ணையும் கடத்திச் சென்றாராம் அந்த இளைஞர்.

இந்த வழக்கு, தெல்தெனியா வட்டார நீதிமன்றத்தில், கண்டி மாவட்ட மேலதிக மாஜிஸ்திரேட் திரு. ஜி. மதநாயக்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் கடந்த 1968-ம் ஆண்டு தெல்தெனியாவைச் சேர்ந்த ஈ. எம். ஜி. கே. முத்துபண்டா எட்டபவின் மகளான அனுலாவதியைக் கடத்திச் சென்றதாக, புசல்லாவையைச் சேர்ந்த "ஜோதி" என்று அழைக்கப்படும் ஐ. ஜி. ஜோன் என்ற 21 வயது இளைஞர் மீது பொலீஸார் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதற்கு முன்னரும் இதே போன்ற ஒரு குற்றத்தைச் செய்து, அதுபற்றிய வழக்கு விசாரணை முடியாமல் இருப்பதை அந்த இளைஞன் ஒத்துக் கொண்டான்.

வழக்கு விசாரணையின் முடிவில், எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட மாஜிஸ்திரேட், அவருக்கு இரண்டு மாதக் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார். (க)

## போத்தல் லாம்பு பெண்ணின் உயிரை பறித்தது

போத்தல் லாம்பு ஒன்று, இளம் பெண்ணின் உயிரைப் பறித்தது. மெதவத்தை என்ற இடத்தில் நடைபெற்ற இந்தப் பரிதாப சம்பவத்தில் பதினாறு வயதுப் பருவப் பெண்ணான யோகமணி என்பவர் பலியானார். (க)


தந்தி
சிறு விளம்பரங்கள்

விற்பனைக்கு

கட்டிடப் பொருட்கள்

இறக்குமதி செய்யப்பட்ட முதல் தரமான போட்லான்ட் சீமெந்து 11-75 வீதம் பெற்றுக் கொள்ளலாம். பிரின்ஸ்லீ டிரேடிங் கம்பனி, 414/21, கே. சிறில் சி. பெரேரா மாவத்த, கொழும்பு-13. R. 66829

வசியம்

காதலில் வெற்றியை எதிர்பார்ப்பவர்களுக்கு தவறாத மலையாளி வசிய பரிகாரம். மூன்று நாட்களில் பலன் கிடைக்கும். இருவரின் பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்: இ. பாலன், குப்த வித்தியாதனய ஊருப்பொல.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லவர் என்று நம்பி மணந்தேன்...ஆனால்

# குடிபோதையில் வந்து அவர் என்னை அடிப்பார்

## ஜீவனாம்ச வழக்கில் மனைவி சாட்சியம்

"நான் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, கர்ப்பச் சிதைவு ஏற்பட்டபொழுதும் எனது கணவர் என்னை உதைத்துத்தாக்கியதைப் பற்றி நான் டாக்டரிடம் சொல்லவில்லை. அந்த நிலையிலும் நான் அவரைக் காப்பாற்றவே செய்தேன்."

கொழும்பு மேலதிக மாஜிஸ்திரேட் திரு. நந்தா விஜயசேகரா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஜீவனாம்ச வழக்கொன்றில் சாட்சியமளித்த மனுதார் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த வழக்கில், இலங்கைப் போக்குவரத்துச் சபை நிதிப் பிரிவில் கடமையாற்றும் வெலன்டைன் ஜயவர்தன என்பவரிடம் இருந்து, தனக்கும் தனது குழந்தைக்கும் ஜீவனாம்சம் பெற்றுத்தருமாறு கோரி பத்தரமுல்லையைச் சேர்ந்த எஸ். டி. மல்லிகா ஜயவர்தன என்ற பெண் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

மனுதார் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"நான் பிரதிவாதியை 1967-ம் ஆண்டு, டிசம்பர் மாதம் 28-ம் திகதி திருமணம் செய்தேன். அதன் மூலம் எங்களுக்கு ஒரு குழந்தை இருக்கிறது. நான் ஒரு அனாதை. சிறு வயதிலேயே பெற்றோரை இழந்து விட்டேன். எனது மாமியார்தான் என்னை வளர்த்து வந்தார்.

"பிரதிவாதியின் தாயார்தான் எங்கள் திருமணத்திற்கு ஏற்பாடு செய்தார். திருமணத்தின் பின் நான் கருத்தரித்தேன். எனது கணவர் குடிப்பழக்கமுடையவர். குடித்துவிட்டு வந்து அவர் என்னைத் தாக்குவார்.

"நான் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின், முதலாவது குழந்தை கருச்சிதைவு ஏற்பட்டது. அப்பொழுதும் என் கணவர் என்னைத் தாக்கியதைப்பற்றி நான் டாக்டரிடம் கூறவில்லை. அந்த சந்தர்ப்பத்திலும் நான் அவரைக் காப்பாற்றவே எண்ணினேன்."

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்:- "உனது திருமணத்திற்கு முன்னர், உன் கணவன் குடிப்பழக்கம் உடையவர் என்பது உனக்குத் தெரியாதா?"

வாதி:- "எனக்குத் தெரியாது. தனது மகன் ஒரு கோப்பை தேநீர்கூடக் குடிப்பதில்லை என்று தான் அவரது தாயார் என்னிடம் கூறினார்".

இந்தக் கட்டத்தில் மேல் விசாரணை ஜுலை 21-ம் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டது. (க)

## நகை விற்பனை நிலையங்களை சுங்கப்பகுதி முற்றுகையிடும்

சுங்க இலாகா அதிகாரிகள், பொலீசாரின் உதவியுடன், கொழும்பு நகரிலும்,வெளியூர்களிலுமுள்ள பிரபல நகை வியாபார ஸ்தலங்களையும், நகை அடைவு பிடிக்கும் நிலையங்களையும் வியாபார நிலையங்களையும் கடந்த பத்துத் தினங்களாகத் திடீர் முற்றுகையிட்டு சோதனை நடத்தினர்.

அண்மையில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து, 1,500,000 ரூபா பெறுமதி வாய்ந்த இரத்தினக் கற்களை, இலங்கை விமானச் சேவையைச் சேர்ந்த ஒரு நபரிடமிருந்து கைப்பற்றியதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கையை சுங்க இலாகா அதிகாரிகள் மேற்கொண்டனர்.

சில பிரபல வர்த்தகர்களின் உதவியுடன், இலங்கை விமானச் சேவையைச் சேர்ந்தவர்கள், சிங்கப்பூருக்குக் கள்ளக் கடத்தல் செய்வதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து இந்த வர்த்தக ஸ்தாபனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இது சம்பந்தமாக, சுங்க இலாகா அதிகாரிகளும் பொலீஸாரும் பல முக்கிய பிரமுகர்களை இதுவரை விசாரணை செய்துள்ளதாகத் தெரிகிறது.

சுங்க இலாகாவைச் சேர்ந்த உதவி விசாரணை அதிகாரி திரு எஸ். பொன்னையா தலைமையில் இந்த முற்றுகைகளும் விசாரணைகளும் இடம்பெற்றன. (க)

## எம். பி.க்களின் உதவியை அமைச்சர் நாடுகிறார்

வர்த்தகர்கள் பாவனைப் பொருட்களில் கொள்ளை லாபமடிப்பதை முறியடிப்பதற்கு நாடாளுமன்ற அங்கத்தவர்களின் ஒத்துழைப்பை நாடுவது என்று வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு டி. பி. இலங்கரத்தின தீர்மானித்திருக்கிறார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்றக் கூட்டம் நேற்றுக் கூடியபொழுது, அரசாங்கத்துக்குக் கெட்ட பெயரைத் தேடிக் கொடுக்கும் நோக்கத்துடன், சில வர்த்தகர்கள் பொருட்களைப் பதுக்கி வைத்துக் கொள்ளை லாபம் அடிப்பதாக, அமைச்சர் இலங்கரத்தின கூறினார்.

லங்கா சஜுசலவினால் இறக்குமதி செய்யப்படும் ஜவுளி வகைகளைக் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையங்களிலேயே புறம்பான பகுதிகளை ஆரம்பித்து விற்பனை செய்வது பற்றியும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக ஒவ்வோர் அமைச்சுக்களின் கீழும் ஒவ்வோர் ஆலோசனைக் கமிட்டிகளை ஏற்படுத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (க)

## உணவுஇறக்குமதிவர்த்தகம் இலங்கையர் மயமாகிறது

இலங்கைப் பிரஜைகள் அல்லாதோர், "கௌரவப் பிரஜைகள்" தற்காலிக வாச பெர்மிட்காரர்கள் ஆகியோர் வசமிருக்கும் உணவு இறக்குமதி வர்த்தகம்,இம் மாதத்துக்குள் முற்றாக இலங்கையர் வசம் ஒப்படைக்கப்படவிருக்கிறது.

இதுவரை காலமும் உணவு இறக்குமதி வர்த்தகத்தை நடத்தி வந்த இலங்கையர் அல்லாதோரும், தற்காலிக வாச பெர்மிட் உடையவர்களுமான சுமார் இருபத வர்த்தகர்களின் உணவு இறக்குமதி லைசென்சுகளை கடந்த வாரம் திடீரென்று மேற்கொண்ட நடவடிக்கையின் மூலம் அரசாங்கம் திரும்பப் பெற்றுக் கொண்டது.

இவ்விதமான இலங்கையரல்லாத சில வர்த்தகர்களின்இறக்குமதி லைசென்சுகளை இரவோடிரவாக அரசாங்கம் ரத்துச் செய்ததாகவும் தெரிகிறது. (க)

## ஜீவனாம்சவழக்கு தள்ளுபடியானது

ஆடவர் ஒருவருக்கு எதிராக, இருபத்திரண்டு வயது இளம் பெண் ஒருத்தி தொடர்ந்த ஜீவனாம்ச வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. கண்டி மாஜிஸ்திரேட் திரு. எப். ஜி. பி. பெர்னாண்டோ இந்த வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

ஹோமகம இ. போ. ச. டிப்போவைச் சேர்ந்த எச். ஜி. விமலரத்தின என்பவரிடமிருந்து ஜீவனாம்சம் பெற்றுத்தருமாறு கோரி, அவர் வீட்டில் வேலைக்காரியாக இருந்த 22 வயதுடைய டபிள்யூ. சோமவதி என்ற பெண் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

நீண்ட விசாரணைக்குப் பின் மாஜிஸ்திரேட் இந்த வழக்கைத் தள்ளுபடி செய்தார். (க)

## மாணிக்கவாசகர் குருபூசை விழா

கொழும்பு, விவேகானந்த மகா வித்தியாலயத்தில் நாளை (7-ம் திகதி) மாலை 6 மணிக்கு மணிவாசகர் குருபூசை விழா கொண்டாடப்படும்.

விவேகானந்த சபையின் உபதலைவரும், கல்வி அமைச்சின் ஆங்கிலப் பிரிவு கல்வி ஆலோசகருமாகிய திரு. தி. மாணிக்கவாசகர் தலைமையில் இவ்விழா நடைபெறும். (க)

## வெளிமடை வழக்கு தீர்ப்பு ஜுலை 8-ல்

வெளிமடைத் தேர்தல் ஆட்சேப மனு வழக்கின் தீர்ப்பு ஜுலை 8-ந் திகதி வழங்கப்படும்.

நீதியரசர் திரு. ஏ. ஸி. அலஸ்ரால் கொழும்பு உயர் நீதி மன்றத்தில் இவ் வழக்கின் தீர்ப்பு வழங்கப்படும். (க-15)

## இலங்கை குடியரசு ஆவதை தமிழரசு ஆதரிக்குமாம்

"இலங்கையைக் குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்துவதை நாம் முழு மனதுடன் ஆதரிக்கிறோம்."

தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அல்வாயில் பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ஜெயக்கொடி ஆகியோருக்கு வரவேற்பு உபசாரம் அளிக்கப்பட்டபோதே திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இக் கூட்டத்தில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசும்பொழுது, "எங்களது கொள்கையில் இருந்து நாம் ஒரு அங்குலமாவது விட்டுக்கொடுக்க மாட்டோம். அடிப்படை உரிமைகளைப் பெற தமிழர் எச்சந்தர்ப்பத்திலும் போராடியே தீருவர். சமஷ்டிக் கட்சி துவேஷக் கட்சி அல்ல. சமஷ்டி ஆட்சியில்தான் ஒற்றுமை, உயர்வைப் பெறலாம்" எனக் கூறினார்.

திரு. கே. ஜெயக்கொடி பேசுகையில் இன்றைய அரசாங்கத்தின் மொழிக் கொள்கை திருப்தியானதல்ல என்று கூறினார்.

திரு. கே. துரைரத்தினம், செனட்டர் எஸ். நடராசா ஆகியோரும் பேசினர். (க-15)

## லண்டனில் புதிய இந்துக் கோயில்

லண்டன், ஜுலை 5

அண்மையில் லண்டன் மாநகரைச் சேர்ந்த இஸ்லிங்டன் என்னும் இடத்தில் ஸ்ரீ நாராயணசுவாமி கோயில் ஒன்று கோலாகலமான முறையில் கும்பாபிஷேகம் செய்து திறந்து வைக்கப்பட்டது.

பிரிட்டன் அடங்கிலுமிருந்து ஆயிரக் கணக்கான இந்துக்கள் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர். இந்த வைபவத்திற்கென விசேஷமாக இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட யோகிஜி மகராஜும் மற்றும் குருக்கள்மாரும் இக்கோவிலை திறந்து வைத்தனர். (க)

## புறக்கோட்டை முடிச்சுமாறி கைவிரல் ரேகை பதிவானது

புறக்கோட்டை முடிச்சுமாறி ஒருவரின் கைவிரல் அடையாளங்களை அனுராதபுரம் பொலீஸார் பதிவு செய்து வைத்திருக்கின்றனர்.

ஈ. டபிள்யூ. எம். தர்மரத்தின பண்டார என்ற நபரிடம் இருந்து பொஸன் பண்டிகையன்று பத்து ரூபா ஜேப்படி செய்ததாகக் குற்றம் சாட்டி, கொழும்பு, புறக்கோட்டையைச் சேர்ந்த டபிள்யூ. பிரேமரத்தின என்ற ஆசாமியைக் கைது செய்து விளக்க மறியலில் வைத்திருந்த பொலீஸார், அவரை அனுராதபுரம் மேலதிக மாஜிஸ்திரேட் திரு. மேவின் விஜயசிங்கா முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

வழக்கு விசாரணையின் முடிவில், சந்தேக நபரைக் குற்றவாளியாகக் கண்ட நீதிபதி, அவரது கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யும்படி உத்தரவிட்டு, தீர்ப்பு வழங்குவதை ஜுலை மாதம் 7-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (க)

## இ. போ. ச. கண்காணிப்பாளர் சேவை ஒழிக்கப்படும்

இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் தரிப்பு நிலைய கண்காணிப்பாளர்கள் சேவை ஒழிக்கப்படும்.

முன்னாள் தேசியமய சேவைகள் அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாஸாவால் இவர்கள் நியமிக்கப்பட்டனர்.

270 கண்காணிப்பாளர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள். இப்போதைய புனரமைப்பின் படி இவர்களின் சேவை தேவைப்படாது. வேலைநீக்கம் பற்றிய கடிதங்கள் வெகு விரைவில் அனுப்பப்படும். (க-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஓடும் ரயிலுக்கு முன் தண்டவாளத்தில் படுக்கவைத்து

# இரண்டு குழந்தைகளை கொன்ருளாம் அன்னை!

## தற்கொலை செய்ய முயன்ற அவளும் கைதானுள்

யாழ்ப்பாணம், ஜூலை, 5

இருவரைத் திருமணம் செய்து இரண்டு குழந்தைகளுக்குத் தாயான ஒரு ஏழைப் பெண் இரண்டு குழந்தைகளையும் ஓடும் ரயிலுக்குப் பலி கொடுத்துத் தாமும் ஸ்தலத்திலே உயிரை விட முயன்ற சம்பவம் கோண்டாவிலுக்கு அருகில் நடைபெற்றது.

திருமதி வீரப்பன் செல்லம் என்ற 21 வயதுப் பெண்மணியே குழந்தைகளைக் கொன்று தாமும் தற்கொலை செய்து கொள்ள முயன்றவர் ஆவர்.

விசில் ஊதிய வண்ணம் பேரிரைச்சலுடன் வந்த ரயிலின் முன்னல் தண்டவாளத்தில் ருக்மணி தேவி என்ற இரண்டு வயதுப் பெண் குழந்தையையும், சுப்பிரமணியம் என்ற மூன்று வயது ஆண் குழந்தையையும் வீரப்பன் செல்லம் என்ற அந்தத் தாய் மின் வேகத்தில் மளமளவென்று படுக்க வைத்தார்.

குழந்தைகளுக்கருகில் தாமும் தண்டவாளத்தில் தலையை வைத்து அலாக்காகப் படுத்துக் கொண்டார்.

வேகமாக வந்த ரயில் இன்னும் சுமார் இரண்டு அடி வரையில் ஓடியிருக்குமானுல் மூன்று உயிர்கள் போயிருக்கும் சடலங்களைக் கூட்டித் தள்ளவேண்டியிருக்கும்.

கிறீச் என்ற ஓசையுடன் ரயில் முதல் குழந்தைக்கு அருகில் சடுதியாக நின்றது.

"வாழவும் முடியவில்லை, சாகவும் முடியவில்லை" என்ற பரிதாபகரமான ஏமாற்ற வார்த்தைகளை உதிர்த்தபடி அந்தத் தாய் எழுந்தார். குழந்தைகள் ஒன்றும் புரியாமல் வீரிட்டு அழுதன.

பொலீஸ் விசாரணையின் போது திருமதி வீரப்பன் செல்லம் தாம் இருவரைக் கல்யாணம் செய்து கொண்டதாகவும், தம்முடைய துரதிஷ்டம் இருவருமே இறந்து விட்டதாவும் சொன்னர்.

தம்முடைய இரண்டு குழந்தைகளும் பசி தாங்காது தமது முகத்தைப் பார்த்து அம்மா அம்மா என்று கதறியழுததாகவும், அவர்களின் பசித்த வயிற்றுக்குக் கொஞ்சம் கஞ்சியாவது கொடுக்க வழியில்லாது தாம் தவித்ததாகவும் அவர் சொன்னர்.

ஏழைகளுக்கு இவ்வுலகில் வாழ்வில்லை சாவில் மட்டும்தான் நிம்மதி காணலாம் என்ற முடிவுடனேயே தாம் குழந்தைகளை ஓடும் ரயிலுக்குப் பலி கொடுத்துத் தாமும் ஸ்தலத்திலேயே தமது உயிரை விடத்துணிந்ததாகவும் அவர் கூறினர்.

கொலை, தற்கொலை முயற்சிகளில் இறங்கினர் என்ற குற்றச் சாட்டின்பேரில் திருமதி வீரப்பன் செல்லம் மீது வழக்குத் தொடர்வதற்கு முன்னேடியாக அவரை மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்யப் பொலீஸார் அழைத்துச் சென்றனர். (உ-220)

## சுகததாசா நடவடிக்கையை விசாரணை செய்ய ஒரு குழு

முன்னைநாள் தேசிய சேவைகள், விளையாட்டுதுறை அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாஸாவினல் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள்பற்றி விசாரணை செய்வதற்கு திரு. பீட்டர் கெனமன் தலைமையில் தெரிவுக் குழு ஒன்று நியமிக்க வேண்டும் என்று, நேற்று நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட பிரேரணை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

சபை முதல்வர் சார்பில் வெளிநாட்டு, உள் நாட்டு வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்தின மேற்கண்டவாறு கோரும் பிரேரணையைக் கொண்டுவந்தார்.

இந்தப் பிரேரணை பற்றிப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜயவர்தன, "இந்தப் பிரேரணையை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனல், தனது கல்லூரி நாட்களில் திரு. சுகததாஸ மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றியும் விசாரணை செய்யப் போகிறீர்களா?" என்று கேட்டார். (க)

## முதற்கூட்டம் நடைபெற்றது

இலங்கை வங்கி புதிய டைரக்டர்கள் சபையின் முதலாவது கூட்டம் நேற்று நடைபெற்றது.

புதிய சபையின் தலைவர் திரு. எம். எவ். டி. எஸ். ஜயரத்ன, திரு. எஸ். ஈ. சத்தரசிங்க, திரு. என். சத்தியேந்திரா, டாக்டர் ஜே. பி. தெலகம, திரு. டி. டபிள்யூ. வணிகசேர, திரு. யூ. கே. எட்மண்ட் ஆகியோர் நேற்றைய கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இலங்கை வங்கி ஜெனரல் மனேஜர், உயர் அதிகாரிகள், தொழிற்சங்க வாதிகள் ஆகியோர் டைரக்டர்கள் சபையை வரவேற்றுப் பேசினர். (க-15)

### அரசாங்க ஆஸ்பத்திரிகளில் உள்ள

# பணம் செலுத்தித் தங்கும் வார்ட்டுகள் ஒழிக்கப்படும்

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் நோயாளர்கள் பணம் செலுத்தித் தங்கும் வார்டுகளை ஒழிப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

எல்லா நோயாளிகளுக்கும் எந்தவித பாகுபாடும் இல்லாமல் ஒரே சீரான சேவை கிடைக்க வழி செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடனேயே, பணம் செலுத்தித் தங்கும் வார்டுகளை ஒழிக்க அரசாங்கம் முன்வந்திருக்கிறது.

தேவையான மருந்து வகைகள் அனைத்தும் பொது மக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்கச் செய்வதற்கான பூர்வாங்க ஏற்பாடாக அரசாங்கம் மருந்துக் கூட்டுத்தாபனம் ஒன்றையும் புதிதாகத் தோற்றுவிக்க இருக்கிறது.

இந்த இரு நடவடிக்கைகளையும் சுகாதாரக் கமிட்டியின் சிபார்சின் பேரிலேயே அரசாங்கம் மேற்கொள்கிறது.

நாட்டின் சுகாதார சேவையை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாம் என்பது பற்றி ஒன்பது உறுப்பினர்கள் கொண்ட கமிட்டி ஒன்று விசாரணைகள் நடத்தி, அண்மையில், அறிக்கை சமர்ப்பித்தது. அந்த அறிக்கையில் மேற்படி இரண்டு சிபார்சுகளும் இடம் பெற்றுள்ளன.

மருந்துக் கூட்டுத்தாபனத்தைத் தோற்றுவிக்கும் ஏற்பாடுகளை சுகாதார அமைச்சர் திரு. டபிள்யூ. பி. ஜி. ஆரியதாச இப்பொழுது செய்து வருகிருர்.

இந்தக் கூட்டுத்தாபனம் வெளிநாடுகளில் இருந்து மருந்து வகைகளை இறக்குமதி செய்யும். உள்ளூரில் தனியாரால் மேற்கொள்ளப்பட்டு வரும் மருந்து உற்பத்தித் தொழிலைக் கூட்டுத்தாபனம் பொறுப்பேற்றுக் கொள்ளும்.

அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கும் தனியார் ஆஸ்பத்திரிகளுக்கும், தனிப்பட்ட விற்பனையாளர்களுக்கும் கூட்டுத்தாபனமே மருந்து வகைகளை விநியோகிக்கவும், விற்கவும் செய்யும். (க)





## கோபால் பல்பொடி

பற்களுக்கு வெண்மை தந்து பல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் விற்கப்படுகிறது.

**S. P. S. ஜெயம் அன் கோ.**

மதுரை - கொழும்பு

விற்குமிடம்:-

34, செட்டியார் தெரு,

கொழும்பு - 11.

தபால் பெட்டி: 1298.

தொலைபேசி எண்; 26584


இப் பத்திரிகையை அச்சிட்டவர்: சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு — 12 (இலங்கை). வெளியிட்ட திகதி 6 ஜூலை 1970.
Thanthi 5. Gunasena Mawatha, Colombo 12.


## பயங்கர விமான விபத்து

லண்டன், ஜூலை. 5

பேர்லோனவுக்கு அருகில் நிகழ்ந்த விமான விபத்தில் 112 பேர் கொல்லப்பட்டனர். இவர்கள் அனைவரும் பிரிட்டனைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிகிறது.

இந்த ஆண்டு நிகழ்ந்த மிகப் பயங்கரமான விமான விபத்து இது எனக் கூறப்படுகிறது.

இதற்கிடையில் பிரேஸில் விமானம் ஒன்று கியுபாவுக்கு பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்டுள்ளது. இந்த விமானத்தில் 54 பேர் பிரயாணம் செய்ததாகக் கூறப்படுகிறது.



# சிஹானுக்கிற்கு மரண தண்டனை!

நாம்பெங், ஜூலை 5

பதவியிலிருந்து விலக்கப்பட்டு தற்போது சீனவில் அரசியல் புகலிடம் பெற்றுள்ள முன்னைநாள் கம்போடிய ஜனதிபதி இளவரசர் சிஹானுக்கிற்கு இராணுவ நீதிமன்றம் ஒன்று மரண தண்டனை விதித்துள்ளது. சிஹானுக் இல்லாமலேயே இராணுவ நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை செய்யப்பட்டது.

உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் நடைபெற்ற இந்த விசாரணையின் முடிவில், இளவரசரின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வது என்றும்; அவரது பிரஜா உரிமையை ரத்துச் செய்வதென்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

எதிரி தரப்பு வழக்கறிஞர்கள், சிஹானுக்கின் சார்பில் குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமையன்று ஆரம்பமான வழக்கு விசாரணையில், மொத்தம் 25 வாதித்தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டனர்.

கடந்த 15 வருடங்களாக நாட்டை ஆண்ட இளவரசர், ஆயிரம் பேருக்கு மேல் கொன்று குவித்தார் என்றும்; அரசியல் சட்டத்தை மீறினர் என்றும்; ஊழல்களை புரிந்தார் என்றும் குற்றம் சாட்டப்பட்டிருந்தார். இத்தகைய குற்றங்களுக்கு மரண தண்டனை விதிப்பது கம்போடிய நாட்டு வழக்கமாகும். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org